பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 07 2025 **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக நாளை பிரிட்டன் செல்கிறார்.
- அமெரிக்காவிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ள **Apache** ஹெலிகாப்டர்கள் நாட்டின் பாதுகாப்பிற்கு வலுசேர்க்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் இடையூறு ஏற்படுத்துவதால் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.
- செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களின் வரவால், தொழிலாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- உலக பாரா எலைட் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Bhavina Ben Patel** வெண்கலப்பதக்கம் வென்றார்.

-இனி விரிவான செய்திகள்--

**<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக நாளை பிரிட்டன் செல்கிறார்.

பிரிட்டன் அரசர் மூன்றாவது சார்லஸ், பிரதமர் திரு **Keir Starmer** ஆகியோரையும் சந்தித்து பேசவுள்ளார்.

புதுதில்லியில் இத்தகவலை தெரிவித்த வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, பிரிட்டனில் உள்ள தொழில்துறையினரை சந்தித்து இந்தியாவில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் பிரதமர் பேச உள்ளதாக தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

இந்திய ராணுவத்திற்காக அமெரிக்காவிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட **Apache** ஹெலிகாப்டர்களின் முதல் தொகுதி இன்று இந்தியா வந்து சேர்ந்தது.

வானின் பீரங்கி என்று அழைக்கப்படும் இந்த சக்தி வாய்ந்த ஹெலிகாப்டர்கள் அதிக அளவில் வெடிப்பொருட்களை எடுத்துச்செல்லும் திறன் வாய்ந்தது.

இந்த ஹெலிகாப்டரில் நவீன ரக ஆயுதங்கள், சென்சார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அனைத்து வானிலையிலும் சிறப்பாக பறந்துசெல்லும் திறன் மிக்கது.

இந்திய ராணுவத்திற்கு **Apache** ஹெலிகாப்டர்கள் மேலும் வலுசேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, இந்திய விமானப்படை 22 **Apache** ஹெலிகாப்டர்களை 2015-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொள்முதல் செய்தது.

தற்போது, இந்திய ராணுவத்திற்கென்று இந்த ஹெலிகாப்டர்கள் வாங்கப்பட்டுள்ளன.

<<<<<>>>>>

**Apache** ஹெலிகாப்டர்களின் வருகை நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், வான்வழி தாக்குதலின்மூலம் பெரிய சவால்களை எதிர்கொள்வதற்கு இந்த ஹெலிகாப்டர்கள் பேருதவியாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் இடையூறு ஏற்படுத்துவதன்மூலம் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகள் குறித்து ஒரு குறிப்பிட்ட கால அளவில் விவாதிப்பது என முடிவு செய்யப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சிகள் எழுப்பும் பிரச்சினைகளை ஒவ்வொன்றாக முன்வைத்தால், அதற்கான தீர்வு கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதை தவிர்த்துவிட்டு, பதாகைகளை ஏந்தி குரல் எழுப்புவதால் அவை நடவடிக்கைகள் பாதிப்புக்கு உள்ளாவதாகவும், மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அரசின் பண விரையத்திற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொறுப்பேற்பார்களா என்றும் திரு கிரண் ரிஜிஜு கேள்வி எழுப்பினார்.

<<<<<>>>>>

2027-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான ஆயத்தப்பணிகள் நடைபெற்று வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் இன்று மக்களவையில் தெரிவித்தார்.

அவர் அளித்த எழுத்துப்பூர்வமான பதிலில், கடந்த மாதம் 16-ஆம் தேதி இதற்கான அறிவிப்பு அரசிதழில் வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 3, 4-ஆம் தேதிகளில் புதுதில்லியில் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கில் 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விவரங்கள் அனைத்து மாநிலங்களிலும் உள்ள அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, ஆலோசனைகளும் பெறப்பட்டதாக கூறியுள்ளார்.

இந்த கருத்தரங்கில் கணக்கெடுப்பு மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் குறித்த தெளிவான செயல்திட்டம் வரையறை செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கணக்கெடுப்பு புள்ளி விவரங்களை செல்போன் செயலி மூலம் பெறுவது தொடர்பாகவும், ஒருங்கிணைந்த கண்காணிப்பை மேற்கொள்வதற்கான கட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும் திரு நித்யானந்த ராய் தமது பதிலில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

பீகார் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி கட்சியினர் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பங்கேற்ற மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்டோர் சிறப்பு திருத்தப்பணிகளை கைவிட வேண்டும் என வலியுறுத்தினர்.

இதனிடையே, பீகார் சட்டப்பேரவையிலும் இப்பிரச்சினை இன்று எதிரொலித்தது.

ராஷ்ட்ரிய ஜனதாதளம், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிக்கு எதிர்ப்பு தெரிவித்தும், மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாகவும் கூறி முழக்கங்களை எழுப்பினர்.

இதனால், பீகார் சட்டப்பேரவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

<<<<<>>>>>

பாரத சாரண, சாரணியர் இயக்கத்தினருக்கான விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

புதுதில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2018-ஆம் ஆண்டு முதல், 2021-ஆம் ஆண்டு வரை தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவிருக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை குடியரசுத்தலைவர் வழங்கினார்.

<<<<<>>>>>

மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க கால நிர்ணயம் செய்வது தொடர்பாக பதிலளிக்குமாறு மத்திய – மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் இன்று நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

தமிழ்நாடு அரசின் நிலுவையில் உள்ள மசோதாக்கள் தொடர்பாக, வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அரசியல் சாசனத்தின் 200 மற்றும் 201-ஆவது பிரிவுகளின்கீழ், நடவடிக்கை எடுப்பது தொடர்பாக உச்சநீதிமன்றத்தின் ஆலோசனையை கோரியிருந்தார்.

இதன் அடிப்படையில், உச்சநீதிமன்றம் மத்திய – மாநில அரசுகளுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களின் வரவால் தொழிலாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மூன்றாவது உலக தொழில் உறவுகள் குறித்த உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், தொழில் நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசுக்கு இடையிலான ஒத்துழைப்பு சுமூகமாக இருக்கும்பட்சத்தில் தொழிலாளர்களின் நிலையும் மேம்படும் என்று தெரிவித்தார்.

இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் அளித்துள்ள புள்ளி விவரங்களின்படி, கடந்த பத்தாண்டுகளில் 17 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், 16 கோடிக்கும் மேற்பட்டோர் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினாா.

வரும் ஐந்தாண்டுகளில் மேலும் ஐந்து கோடி வேலைவாய்ப்புகளை மத்திய அரசு உருவாக்கித்தருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<>>>>>

மாநிலங்களவை உறுப்பினர் திருமதி பி டி உஷா இன்று மரியாதை நிமித்தமாக தம்மை சந்தித்ததாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வமும் இன்று தம்மை சந்தித்ததாக கூறியுள்ளார்.

<<<<<>>>>>

பிரதமரின் பால புரஸ்கார் விருதுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் அடுத்த மாதம் 15-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

வீர தீர செயல்கள், சமூக பணி, சுற்றுச்சூழல், விளையாட்டு, கலை, கலாச்சாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் குழந்தைகள் குறித்த பரிந்துரைகளை தேசிய விருதுகள் இணையதளத்தில் சமர்ப்பிக்கலாம்.

ஐந்து வயது முதல், 18 வயதுக்கு உட்பட்டோர் இந்த விருதுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில் சேலம் மாவட்ட வனத்துறையும், பெரியார் பல்கலைக்கழகமும் இணைந்து பசுமைக்காடுகளை வளர்க்கும் முயற்சியை தொடங்கியுள்ளன.

சுற்றுச்சூழல் பராமரிப்புக்கு இந்த முயற்சி பெரும் வெற்றியை தரும் என்று மாவட்ட வன அலுவலர் திரு காஷியப் ஷஷாங்க் ரவி தெரிவித்துள்ளார்.

***(Voice Byte - காஷியப் ஷஷாங்க் ரவி – 23 ‘Sec.)***

பசுமை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை இந்த மரம் நடும் இயக்கம் தங்களிடையே ஏற்படுத்தியுள்ளதாக மாணவிகள் தெரிவித்தனர்.

***(Voice Byte – மாணவிகள் – 23 Sec.)***

<<<<<>>>>>

மூன்று லட்சம் தட்டம்மை தடுப்பூசிகளை தங்கள் நாட்டுக்கு வழங்கிய இந்தியாவுக்கு, பொலிவியா நன்றி தெரிவித்துள்ளது.

அந்நாட்டு அதிபர் **Luis Alberto** விடுத்துள்ள செய்தியில், இக்கட்டான நேரத்தில் தங்களுக்கு இந்த தடுப்பூசியை தந்து உதவிய இந்தியாவுக்கு தங்கள் நாட்டின் சார்பில் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒன்று முதல் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பொலிவியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் தடுப்பூசி திட்ட இயக்கத்திற்கு இந்தியா அனுப்பியுள்ள மருந்துகள் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பாரா எலைட் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பவினா பென் பட்டேல் வெண்கலப்பதக்கம் வென்றார்.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>**